1994 மார்ச் 17]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் மீண்டும் அதை கேட்கிறார். தேவையான அரிசியை இந்த நாட்டிலேயே வாங்கிக் கொள்கிறோம். அதில் ஒன்றும் இப்போது நெருக்கடி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி அமைத்தல்

*21114— திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக நமது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் வெற்றி நடை போட்டு வருகின்ற காலக்கட்டத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே வேகமாகவும் மிகச் சிறப்பு வாய்ந்ததாக வளர்ந்து வருகிற நகரமாகவும் காரைக்குடி விளங்கி வருகிறது. இந்தக் காரைக்குடி நகரத்தில் அவசரச் சிகிச்சைப் பிரிவு இரத்த சேமிப்பு வங்கி இரண்டும் இதுவரை இல்லாதது மிகவும் அவல நிலையாகும். இந்தச் சூழ்நிலையில் ஏதாவது விபத்து ஏற்பட்டாலோ 80 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற மதுரைக்குக் கொண்டு செல்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. வழியில் செல்லும்போது விபத்துக் குள்ளான அந்த நபர்கள் இறக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டு

[1994 மார்ச் 17

விடுகிறது. எனவே அத்தகைய உயிரிழப்பைத் தவிர்க்கும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது காரைக்குடி நகரத்தில் இவைகளை அமைத்து என் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தாலுக்கா மருத்துவமனைகளுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக அரசு படிப்படியாகத் திட்டங்களைச் செயல் படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு குறுகிய காலத்திற்குள்ளாக எல்லா வசதிகளையும் செய்துவிட முடியாது. இந்த நகரத்தில் இருக்கிற மருத்துவ மனையைப் பொறுத்தவரையிலும் அது மிக முக்கியமான மருத்துவமனைதான். ஏற்கெனவே இருக்கிற வசதிகளை வைத்தே இப்போது விபத்துகளின் மூலம் ஆபத்தில் வருகின்ற மக்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் சிறப்புப் பிரிவாக அமைத்தால் இன்னும் கொஞ்சம் வசதியாக இருக்கும் என்ற உணர்விலேதான் சட்டமன்ற உறுப்பினர் கேட்கிறார். எதிர்காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரத்தில் அனைத்து வசதிகள் இருந்தாலும் மிக முக்கியமான இந்த அரசு மருத்துவ மனையில் இந்த இரண்டு தேவைகளையும் மிக விரைவில் பூர்த்தி செய்து இந்த ஆண்டிலேயே அரசு ஏற்படுத்தித் தந்தால் மிகவும் நன்றி உள்ளவர்களாக எங்களது தொகுதி மக்கள் இருப்பார்கள். எனவே அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்பதையெல்லாம் உடனே செய்ய வேண்டுமென்ற ஆர்வம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் நிதிப் பிரச்சினைதான் குறுக்கே நிற்கிறது. எனவேதான் நான் நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே தெரிவித்தேன். தாலுக்கா மருத்துவமனைகளை ஒவ்வொன்றாக எடுத்து ஆய்வு செய்து படிப்படியாக அதிலே முன்னேற்றங் களைச் செய்ய வேண்டுமென்ற நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது எய்ட்ஸுக்காக தனியாக வெளியிலே இருந்து நிதி நிறுவனத்திலே இருந்து நமக்கு நிதி கிடைக்கிறது. அதன் மூலமாக இரத்த வங்கிகளை வலுப் படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது. எனவே படிப்படியாக நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

1994 மார்ச் 17]

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுதல்.

*22124—திருமதி ப. சரஸ்வதி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை மீண்டும் அரசு மருத்துவ மனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் நகரமானது, அங்கே சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பாலிடெக்னிக் கல்லூரியும் ஆற்று ஓரப் பகுதியில் இருப்பதால் ஜனத்தொகை மிகுந்து இருக்கின்றது. அங்கே அரசு மருத்துவமனையாக இருந்தது பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றப்பட்டது. அதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. விபத்துகள் நடக்கின்ற கால கட்டத்தில் 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நாமக் கல்லுக்கோ அல்லது வேலூருக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு மறு பரிசிலனை செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையிலே அமைக்க